<u>கோபிசெட்டிபாளையம் நகராட்சி</u>

<u>02.03.2026 ந் தேதி நடைபெற்ற சிறப்பு கூட்ட நடவடிக்கைகள் தீர்மான நகல்</u>

1. கோபிசெட்டிபாளையம் வட்டம், கோபிசெட்டிபாளைம் உள்வட்டம், கோபிசெட்டிபாளையம் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.03, சின்னச்சாமி வீதி எண். 3இல் வீரபாண்டி கிராமம், நகரளவை வார்டு B, பிளாக் 21, நகரளவை எண்.39-இல் தெரு என நில வகைபாடு கொண்ட அரசு புறம்போக்கு நிலங்களில் திருமதி. தமிழ்செல்வி, க/பெ. ரமேஷ் 5 வருடங்களுக்கு மேலாக வீடு கட்டி குடியிருந்து வரும் நபருக்கு பட்டா வழங்குதல் குறித்து வருவாய் வட்டாட்சியர் கோபிசெட்டிபாளையம் வட்டம் அவர்களது ந.க.எண்.832/2026/அ2, நாள்.16.02.2026 இன் படி மேற்காண் நபருக்கு பட்டா வழங்க நகராட்சி தீர்மான நகல் மற்றும் ஆட்சேபனையின்மை வழங்குமாறு கோரப்பட்டுள்ளது.

அரசாணை (நிலை) எண்.97, நாள்.21.02.2025இல் ஆட்சேபணைக்குரிய நகராட்சி எல்லைக்குட்பட்ட வண்டிப்பாதை, பாதை, மயானம் மற்றும் தோப்பு என குறிப்பிடப்பட்டுள்ள இடங்களில் பயன்பாடு இல்லாததும் பிற்கால பயன்பாட்டிற்கு வழிவகை இல்லாத இடங்களில் பட்டா வழங்க நகராட்சி தீர்மானம் இயற்றலாம் என குறிப்பிடப்பட்டுள்ளது. எனவே வருவாய் வட்டாச்சியர் கோபிசெட்டிபாளையம் வட்டம் அவர்களால் பரிந்துரை செய்யப்பட்ட மேற்காண் நபர் வீடு கட்டி குடியிருக்கும் தெரு என நில வகைபாடு கொண்ட சர்க்கார் புறம்போக்கு என வரையறுக்கப்பட்ட இடமானது பிற்காலத்தில் தொடர் அணுகு சாலையாக பயன்படுத்த வழிவகை இல்லாத நிலையில் மேற்காண் நபருக்கு இலவச வீட்டுமனை பட்டா வழங்க ஆட்சேபணையின்மை கடிதத்தை நகராட்சி மூலம் வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.
( ந.க.எண்.234/2026/எப்1)

**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதி வழங்கலாம்.
**அலுவலகக் குறிப்பு :-** மன்றம் அனுமதிக்கப்பட்டது. தீர்மான எண்.1479

(ஒப்பம்) என்.ஆர்.நாகராஜ்
தலைவர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி

//உண்மை நகல்//

ஆணையாளர்
கோபிசெட்டிபாளையம் நகராட்சி